பேரவைத் தலைவர் மு. அப்பாவு - இரா.ஆவுடையப்பன்-டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு

# நெல்லை மாவட்டத்தில் திட்டப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு-கீதா ஜீவன் சிறப்புரை

நெல்லை, செப்.27-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நெல்லை, தூத்துக்குடி, தென்காசி,கன்னியாகுமரி, மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே. என். நேரு,சமூகநலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் ஆகியோர் தலைமையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் கார்த்திகேயன்,நகராட்சி நிர்வாக இயக்குனர் சிவராசு,தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குனர் தட்சிணாமூர்த்தி,குடிநீர் வடிகால் வாரிய இணை மேலாண்மை இயக்குனர் சரவணன்,பேரூராட்சிகளின் இயக்குனர் கிரண் குராலா,நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மாவட்ட ஆட்சியர்கள் கார்த்திகேயன், (நெல்லை) செந்தில்ராஜ் (தூத்துக்குடி) துரை.ரவிச்சந்திரன் (தென்காசி) தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல்வஹாப் (பாளை)

மார்க்கண்டேயன் (விளாத்திகுளம்)ராஜா (சங்கரன்கோவில் )சதன் திருமலை குமார் (வாசுதேவநல்லூர்)பழனி நாடார் (தென்காசி) மாநகராட்சி மேயர்கள் பி.எம்.சரவணன் (நெல்லை)ஜெகன் பெரியசாமி (தூத்துக்குடி) மகேஷ் (நாகர்கோவில்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே. என்.நேரு தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை, தூத்துக்குடி, தென்காசி,கன்னியாகுமரி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு செய்து எந்தெந்த இடங்களில் குடிநீர் பற்றாக்குறை இருக்கின்றது எந்த இடத்தில் தண்ணீர் வழங்குவதில் தாமதம் படுகிறது என்று குறித்து ஆய்வு செய்ய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.அதன் அடிப்படையில் நெல்லை, தூத்துக்குடி, தென்காசி,கன்னியாகுமரி, மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் எந்தெந்த இடங்களில் உடனடியாக பணிகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர்,நகராட்சி நிர்வாக இயக்குனர்,குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குனர்,இணை மேலாண்மை இயக்குனர், பேரூராட்சிகளின் இயக்குனர்,நகராட்சி, பேரூராட்சிகள், மாநகராட்சிகள் உள்ளிட்ட அலுவலர்கள் வாயிலாக மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து ஆராய்ந்து அது குறித்து அறிக்கையை முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று அதற்கான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டங்களில் 75 சதவீதம் குடிநீர் விநியோகம் நடந்து வருகிறது 20 ஆண்டுகள் 30 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட குழாயில் பழுது ஏற்பட்டு சில இடங்களில் குறைவான தண்ணீரும், சில இடங்களில் அதிகமாகவும் விநியோகம் செய்யப்படுகிறது. சில இடங்களில் மோட்டார் பழுதுதடைந்து உள்ளது. இவைகள் குறித்து விரிவான ஆய்வு நடத்தி அனைத்து பணிகளும் நிறைவேற்றி தர உத்தரவிடப்பட்டுள்ளது

தூத்துக்குடி,ராமநாதபுரம் மாவட்டங்களில் கடல் நீரை குடிநீராக்குவதை செயல்படுத்துவது குறித்து ஆலோசனை அரசிடம் உள்ளது.எனினும் இதற்கான செலவு அதிகம் ஏற்கனவே காவிரி நீர் படுக்கையிலிருந்து ஒட்டன்சத்திரம்,திண்டுக்கல், ராமநாதபுரம் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூபாய் 4800 கோடியில் பணிகள் நடந்து வருகிறது. எனினும் மழை பொய்த்துப் போகும் காலங்களில் குடிநீரின் அவசியம் கருதி தூத்துக்குடி, இராமநாதபுரம் மற்றும் கடலோர மாவட்டங்களில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தை அமல்படுத்துவது குறித்து முதலமைச்சர் அவர்களுடன் ஆலோசனை செய்து அவரது உத்தரவை பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புளியங்குடி,வாசுதேவநல்லூர் பகுதிக்கு குடிநீர் வழங்க மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் இருந்து குடிநீர் வழங்குவது குறித்து குடிநீர் வடிகால் வாரியம் மூலம் முயற்சி மேற்கொள்ளப்படும்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் ஜல்ஜீவன் திட்டம் சிறப்பாக செயல்படுத் தப்பட்டுள்ளது.அதற்காக ஒன்றிய அரசிடம் இருந்து விருது பெற்றுள்ளோம்.

இராதாபுரம் பகுதிக்கு குடிநீர் வழங்குவதற்கான பொன்னன்குறிச்சி திட்டத்திற்கு மாற்றுப் பணியாக 7.5 கி.மீ. தூரத்திற்கு பைப் லைன்(குழாய்) அமைக்க ரூபாய் 6.6 கோடியில் டெண்டர்விடப்பட்டுள்ளது. இதில் ஒரு மாத பணிகள் முடிவடைந்து விட்டது. இன்னும் 2 மாதங்களில் பணிகள் முடிவடைந்து உவரி, இடையன்குடி,விஜயாபதி, கூடங்குளம், உள்பட 11 கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்படும். அப்போது வீட்டு இணைப்பு குடிநீர் வழங்கப்படும்.

மேலும் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அனைத்து பணிகளும் நிறைவேற்றப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து களக்காடு அருகே சிங்கி குளத்தில் 6 ஏக்கர் பரப்பளவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருவதையும் ரூ 605.75 கோடி மதிப்பில் 831 ஊரக குடியிருப்பு பகுதிகளுக்கு நடந்து வரும் கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகளை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு முன்னிலையில் அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். நிகழ்வில் மாநகராட்சி ஆணையாளர்கள் சிவகிருஷ்ணமூர்த்தி (நெல்லை) தினேஷ் குமார் (தூத்துக்குடி) ஆனந்த மோகன் (நாகர்கோவில்)

முன்னாள் எம்.எல்.ஏ. மாலைராஜா, மற்றும் மாநகராட்சி,நகராட்சி,பேரூராட்சி தலைவர்கள்,உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,நகராட்சி ஆணையாளர்கள்,குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்கள்,கழகத்தினர் கலந்து கொண்டனர்.

தேவகோட்டையில் கலைஞர் நூற்றாண்டு விழா!

# மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்

## அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கிவைத்தார்

சிவகங்கை, செப். 27-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் துறையின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இரண்டாவது மாவட்ட மாற்றுத்திறனாளிகள் சிறப்பு மருத்துவ முகாம் தேவகோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது. மாற்றுத்திறனாளிகள் மாவட்ட அலுவலர் உலகநாதன் வரவேற்று பேசினார். கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் முகாமில்கலந்து கொண்டு37, மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 6வட்சத்து 19ஆயிரம் ஆயிரம் மதிப்புள்ள பேட்டரி கார்கள் செல்போன்கள் மோட்டார் தையல் எந்திரங்கள் மற்றும் பல்வேறு உபகரணங்களை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் நாகனி செந்தில் குமார் வாழ்த்திப்பேசினார். இந்த நிகழ்ச்சியில் மாநில மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உறுப்பினர் புஷ்பராஜ் ஒன்றிய செயலாளர்கள் நாகனிரவி, பூபாலசிங்கம் ,தேவகோட்டை நகர செயலாளர் பெரி. பாலா, மற்றும் நிர்வாகிகள் ஜாகிர், உசேன் அன்பு ,இளங்கோ மற்றும் ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமாரர் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

ஒட்டன்சத்திரத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

# பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்குப் பரிசு!

## பொறியாளர் அணி சார்பில் வழங்கப்பட்டது

திண்டுக்கல்,செப். 27-

ஒட்டன்சத்திரம் கிறிஸ்தவ பொறியியல் கல்லூரியில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி மற்றும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோரின் ஆலோசனைப்படி திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொறியாளர் அணியின் சார்பில் ஒட்டன்சத்திரம் கிறிஸ்தவ பொறியியல் கல்லூரியில் மாணவ-மாணவிகளுக்கான பேச்சுப்போட்டி நடை பெற்றது. போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளரும்,ஒட்டன்சத்திரம் கூட்டுறவு விற்பனையாளர் சங்கத் தலைவருமான இராஜாமணி, ஒட்டன்சத்திரம் நகர செயலாளரும்,நகரத் துணைத்தலைவருமான வெள்ளைச்சாமி, மாவட்ட ஊராட்சிக் குழு துணைத்தலைவர். பொன்ராஜ் ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஊராட்சிக்குழு தலைவர் அய்யமாமள்,சத்தியபுவனா ,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர்கள்,நிர்வாகிகள், கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.


தி.மு.க. விவசாய அணி

# திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட மற்றும் மாநகர தலைவர், துணைத் தலைவர்கள், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம்

தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர். கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மாவட்டந்தோறும் “தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா”வினை தி.மு.க. விவசாய அணி கொண்டாடவிருப்பதையொட்டி, அது குறித்து கலந்தாலோசிக்க,

“திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட தி.மு.க. விவசாய அணி மாவட்ட மற்றும் மாநகர தலைவர், துணைத்தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்” தி.மு.க. விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி, தி.மு.க. விவசாய அணி இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர் ம.முத்துராமலிங்கம், தி.மு.க. விவசாய அணி துணைச் செயலாளர் கே.வி.செல்லப்பா மற்றும் மாநில விவசாய அணி நிர்வாகிகள் ஆகியோர் தலைமையில், திருநெல்வேலி கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், திருநெல்வேலி மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மேயர். ரெ.மகேஷ், ஆகியோர் முன்னிலையில், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தங்கம் தென்னரசு, தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் திருமதி. கீதாஜீவன், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கன்னியாகுமரி மேற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் மனோதங்க ராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றிட, வருகிற 29.09.2023 (வெள்ளிக் கிழமை), காலை 11.30 மணியளவில், குற்றாலம், ஐந்தருவி சாலை, சேனைத் தலைவர் மாளிகை திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. விவசாய அணியின் மாவட்ட மற்றும் மாநகர தலைவர், துணைத் தலைவர்கள் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

**ஏ.கே.எஸ்.விஜயன்**

செயலாளர், தி.மு.க. விவசாய அணி.


நாடெங்கும் ‘நீட்’டெனும் அரக்கனை கொண்டு வந்த

# பி.ஜே.பி.யையும்-அ.தி.மு.க.வையும் விரட்டி அடிப்போம்!

‘நீட்’ என்கிற ஒரு அரக்கனை இந்தியா முழுவதும் செயல்படுத்தியதால் இதுவரை நாடு முழுவதும் 900 மாணவ-மாணவியர் நீட் தேர்வில் தேர்வாகாமல் மரணத்தை தழுவிக் கொண்ட அவர்களுக்கு இந்த நேரத்தில் இரங்கல் தெரிவித்து இனி மேல் அப்படி ஒரு நிலை மாணவர்களுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காக இன்றைக்கு இந்த நீட் நுழைவுத் தேர்வு இந்தியாவில் இருந்து முழுமையாக வெளியேற்றி அனைத்து மாநில மாணவ மாணவியர் அவரவர் படிப்பில் தாய் மொழியில் பிளஸ் டூ படித்து எடுக்கிற மதிப்பெண்ணின் அடிப்படையில் மருத்துவப் படிப்புக்கு தேர்வு செய்ய வேண்டும் என்கிற முழு கோரிக்கையோடு ஒட்டுமொத்த மக்களுக்குமாக திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் ‘நீட்’ தேர்வை எதிர்த்து உண்ணாவிரத அறப்போரை இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதிஅவர்கள் நடத்தியதை ஒட்டுமொத்த மக்களும் பாராட்டுகிறார்கள்

குறிப்பாக இந்தியாவில் மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கையில் 12 சதவீதம் மருத்துவர்கள் தமிழகத்திலிருந்து உருவாகிறார்கள் இதை கூறியவர் பி.ஜே.பி.யின்முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ்வரதன் அவர்கள், ஜூலை 2019-ல் நாடாளுமன்றத்தில் பேசினார்கள் அந்த நேரத்தில் ரிதுஸ்ரீ, ஸ்ரீ வைசியா, மோனிஷா இந்த மூன்று மாணவிகளை தமிழ்நாடு நீட் தேர்வுக்கு பலி கொடுத்திருந்தது. அனிதா முதல் ஊரப்பாக்கம் அனு வரையும் இப்பொழுது மறைந்த ஜெகதீஷ் வரை சுமார் 21 மாணவ மாணவியரின் மரணங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். சமீபத்தில் பலியான தனுஷ் கனிமொழி சௌந்தர்யா ஆகியோர் மரணங்களும் நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழக அரசு கொண்டு வந்த நீட் விலக்கு மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அந்த மசோதாவை ஆளுநர் ஜனாதிபதிக்கு அனுப்பியதாக சொல்லுகிறார். இந்த ஒட்டுமொத்த தமிழ் மக்களின் உணர்வுகளை மதித்து மரியாதைக்குரிய ஜனாதிபதி அவர்கள் கையெழுத்திட்டு இந்தச் சட்ட மசோதாவுக்கு ஒப்புதல் கொடுத்து ஒன்றிய அரசுக்கு அனுப்பி இதை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் கொடுத்தால் தமிழகம் நீட்டில் இருந்து விலக்குப் பெற முடியும்

தமிழக அரசு மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு பள்ளி பாடத்தில் இருந்து நேர்முகத் தேர்வை நடத்தி அல்லது 12வது வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் அதிக மதிப்பெண் பெற்றவர்கள் எப்படி முன்பு மருத்துவத்திற்கும் பொறியியல் படிப்பிற்கும் தேர்வு பெற்றார்களோ அதே போல் அவர்கள் படித்த பாடத்திலிருந்து அவர்களுக்கு தேர்வு நடத்தி அவர்களை தேர்வு செய்தால் கிராமத்தில் இருக்கிற மாணவ-மாணவியர், ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர் பட்டியலினமக்களில் படித்த அப்பாவிகளுடைய குழந்தைகளின் தாய் தந்தையர் தங்களுடைய மகன் மருத்துவராக வருவான் பொறியாளராக வருவான் என்று மிக சந்தோசமாக ஒரு எதிர்காலத்தையே கற்பனைசெய்து வாழ்ந்து வந்தார்கள்.

தாய் தந்தையரின் கனவுகளை நினைவாக்க மருத்துவர்களாக, பொறியாளர்களாக நம்முடைய மாணவ மாணவியர் ஆயிரக்கணக்கில் அச்சத்தோடு வாழ்வின் எதிர்காலம் என்ன ஆகுமோ என்றில்லாமல் 1976-இல் ஒன்றிய அரசின் நிலைப்பாட்டிற்கு. கல்வியை பொதுபட்டியலுக்கு 42வது அரசியல் அமைப்புச்சட்டதிருத்தத்தின் வாயிலாக மாற்றியது.

1976க்கு பிறகு எத்தனை அரசுகள் இந்தியாவில் ஆட்சி புரிந்தன, பல சட்ட திருத்தங்களை கொண்டு வந்தார்கள் ஆனால் எந்த நடுவண் அரசும் கல்வியை பொது பட்டியலுக்கு மாற்றியதை மாநில பட்டியலுக்கு மாற்றி கொடுக்கவில்லை.

அதை மாற்றினால் இந்த பிரச்சினை முழுமையாக தீர்ந்து விடும் தீர்ந்திருக்கும் 2024 இல் வருகிற பாராளுமன்றத் தேர்தலில் ஒட்டு மொத்த இந்தியா மக்களும் இந்தியா என்கிற இந்த ஒன்றுபட்ட கூட்டணிக்கு வாக்களித்து ஒன்றிய அரசு கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையில் ஆட்சிக்கு வந்ததும் இந்தக் கல்விக் கொள்கையை முழுமையாக மாற்றுவதற்கு மாநில பட்டியலுக்கு கல்வியை மாற்றி அமைத்து ஆக வேண்டும், கண்டிப்பாக அது நடக்கும்.

அதற்கு ஒட்டுமொத்த மக்களும் வாக்களிக்க வேண்டும். இப்பொழுது இருக்கிற 18 வயது நிரம்பிய இளைஞர்கள் மாணவ மாணவியர்கள் உங்கள் எதிர்கால வாழ்க்கை தரத்தை உயர்த்த உங்களது கல்வியில் தரமான கல்வியை முழுமையாக கட்டணமில்லாமல் அரசு வழங்க மாநில பட்டியலில் கல்வித் துறையை சேர்க்க இப்பொழுது ஆளுகிற பி.ஜே.பி. அரசை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும். அதற்கு நீங்கள் அத்துணை பேரும் குறிப்பாக 6 கோடியே 27 லட்சம் வாக்காளர்களாக உள்ள தமிழக வாக்காளர்களில் 2 கோடியே 85 லட்சம் பேர் மாணவ மாணவியர்கள் இளைஞர்களாக இருக்கிறார்கள்.

பி.ஜே.பி.க்கும் எதிராக பி.ஜே.பி.யுடன் சேருகிற கட்சிக்கு எதிராக ஒட்டுமொத்த வாக்குகளையும் சிந்தாமல் சிதறாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் தமிழகத்தில் அமைக்கிற கூட்டணிக்கு வாக்களித்தால், உங்கள் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்.

2016 ஜூலை 24 நீட் தேர்வை நிரந்தரமாக்கும் வகையில் புதிய சட்ட திருத்தத்தை ஆளும் பா.ஜ.க. அரசு நாடாளு மன்றத்தில் கொண்டு வந்தது. 2.8.2017-ல் பா.ஜ.க. அரசு பாராளு மன்றத்தில் வாக்கெடுப்புநடத்தி தீர்மானம் நிறைவேற்றியது.

பி.ஜே.பி. அரசு வாக்கெடுப்பு நடத்துவதற்கு முடிவெடுத்து அன்றைக்கு இரு அவைகளிலும் சேர்ந்து அ.தி.மு.க.வுக்கு 52 எம்.பி.க்களை கொண்ட அ.தி.மு.க. கட்சி மாசோதாவுக்கு எதிராக வாக்களித்திருந்தால் ஒட்டுமொத்த இந்தியாவில் நீட் என்கிற அந்த அரக்கனை ஒழித்து இருக்க முடியும்.



**கோவை கே.செல்வராஜ்**
முன்னாள் எம்.எல்.ஏ.
கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர்

நீட்டே இல்லாத ஒரு நிலைப்பாட்டை இந்திய மருத்துவத்துறை நிரந்தரமாக விலக்கு பெற்றிருக்கும். இந்தியா முழுவதும் லட்சக்கணக்கான மாணவ-மாணவியர் பிளஸ் டூ படித்துவிட்டு எந்த தேர்வும் எழுதாமல் நேரடியாக அவர்கள் இரண்டு ஆண்டுகள் படித்து பெற்ற மார்க்கின் அடிப்படையிலேயே எம்.பி.பி. எஸ். படித்து இருப்பார்கள். பொறியியல் கல்லூரிகள் படித்து இருப்பார்கள்

ஆனால் ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் இருக்கிற அனைத்து மாணவ மாணவியர் வாழ்க்கையில் அ.தி.மு.க. சூனியமாக செயல்பட்டது. மாணவ-மாணவியர் இந்தியா முழுவதும்நூற்று க்கணக்கில் தற்கொலை செய்து கொண்டார்களே, இந்த சம்பவத்திற்கு ஒரே காரணம் ஒரே கட்சி பி.ஜே.பி. அரசு, நீட்டை அமுல்படுத்துவதற்கு பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்ட பொழுது எதிர்த்து வாக்களிக்காமல் வெளிநடப்பு செய்து அங்கு இந்த மசோதா நிறைவேறுவதற்கு ஆதரவாக செயல்பட்ட அ.தி.மு.க.தான்.

இந்த பாவமும் பழியும் இந்த உலகம் இருக்கும் வரை அ.தி.மு.க.வின் மன்னிக்க முடியாத குற்றமாகும்.

மூன்று ராஜ்யசபா உறுப்பினர்கள் கொண்ட தி.மு.க. பி.ஜே.பி. அரசின் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தது.

அ.தி.மு.க. உறுப்பினர் நீட் மசோதாவுக்கு எதிராக வாக்களித்திருந்தால் நீட் சட்டமே அமலுக்கு வந்திருக்காது இந்தியாவில் இருக்கிற அத்தனை மக்களும் அத்தனை கட்சிகளும் சொல்லியும் கேட்காமல் அன்றைய தமிழ்நாட்டை முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பி.ஜே.பி.க்கு அடிமைத்தனமாக இருந்து செயல்பட்டதால் இந்த நிலைப்பாட்டை அ.தி.மு.க. எடுத்தது.

கடந்த 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி 1ஆம் தேதி எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு நீட்டுக்கு எதிரான மசோதாக்களை நிறைவேற்றியது தி.மு.க. மற்றும் அனைத்து சட்ட மன்ற கட்சிகளும் ஆதரவுடன் நிறைவேறிய இந்த மசோதாக்களுக்கு அனுமதி கோரி குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

21 மாதங்களாக எந்த பதிலும் ஜனாதிபதி மாளிகையில் இருந்து வரவில்லை எனக் கூறப்பட்டது. பலமுறை சட்டமன்றத்தில் அன்றைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்கள் நாம் அனுப்பிய சட்ட மசோதா நீட் விலக்கு சம்பந்தமாக அனுப்பியது என்ன ஆனது இன்னும் ஏன் நீங்கள் அதை வலியுறுத்தி கேட்காமல் இருக்கிறீர்கள் என்று கேட்ட பொழுது அந்தக் கோப்பு எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை என்று டெல்லியில் பி.ஜே.பி. அரசின் அமைச்சர்கள் சொல்லுவதாக கூறினார்கள்.

அ.தி.மு.க. அரசு மவுனம் சாதித்து வந்தது, இந்த நிலையில் 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 22ஆம் தேதி நீட்டு விலக்கு மசோதாக்களை திருப்பி அனுப்பி விட்டதாகவும் 2019 ஆம் ஆண்டுநீதிமன்றத்தில் கூறியது ஒன்றிய அரசு. இதற்கிடையே ஒன்றிய அரசு நிராகரித்து அனுப்பிய கடிதத்தை 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 22ஆம் தேதி சட்டத்துறை செயலாளர் பூவலிங்கம் பெற்றுவிட்டார். இதை வெளியிலே தெரியாமல் அப்படியே மூடி மறைத்திருக்கிறார்.

தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி தவறான கருத்துக்களை கூறிக்கொண்டு பி.ஜே.பி.க்கு பயந்து கொண்டு அமைதியாகவே இருந்தார்.

தமிழ்நாட்டில் எடப்பாடியின் ஆட்சி தனது கோர முகத்தை காட்டத் தொடங்கியது தமிழக அரசு எடப்பாடி அரசு உடனடியாக ஒன்றிய அரசின் மிரட்டலுக்கு பயந்து சட்டமன்றத்தில் கல்வி அமைச்சரும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் பகிரங்கமாக தெரிவித்தார்கள் நீட்டை படிக்கும் மாணவ மாணவியருக்கு தமிழ்நாடு முழுவதும் அரசு பள்ளிகளிலேயே சனி ஞாயிறு விடுமுறை நாட்களிலும் மற்ற நாட்களிலும் அவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

ஆசிரியர்களுக்கும் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறோம் அரசே பயிற்சி கொடுத்து அவர்களை மருத்துவர்களாக தேர்வு ஆவதற்கு தகுதி உள்ளவர்களாக மாற்றுவோம் அதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் தமிழகமெங்கும் எல்லா மாவட்டத் தலைநகரங்களில் தாலுகா தலைநகரங்களில் எல்லாம் நீட் தேர்வுக்கு கோச்சிங் சென்டர் நடத்துபவர்கள் அதிகமான நிலையங்கள் ஈசல்கள் போல் ஆரம்பித்து விட்டார்கள்.

அவர்கள் கட்டணங்கள் ரூ.2 லட்சம் மூன்று லட்சம் என்று இந்த கோச்சிங் சென்டர்வசூலிக்க ஆரம்பித்துவிட்டார்கள் அதில் பணம் படைத்தவர்கள் உயர் வகுப்பினர் வசதியானவர்களுடைய குழந்தைகள் மட்டும் படிக்க முடிந்தது. கிராமப்புறத்து மாணவ-மாணவியர் ஏழ்மையில் இருக்கிற மாணவ-மாணவிகள் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் பட்டியல் இன மக்கள் இன்னும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிற குடும்பத்தைச் சேர்ந்த மாணவ-மாணவியர் அத்துனை பேரும் நீட்டில் கலந்து கொள்ள முடியாமல் தேர்வு எழுத முடியாமல் அழுது புலம்பினார்கள். ஏராளமான குழந்தைகள் எதிர்காலத்தில் நாம் மருத்துவராக வருவேன் என்ற கனவு கண்டால் அந்த கற்பனையை எல்லாம் இழந்தார்கள்.

இந்த நிலைப்பாட்டை உருவாக்கிக் கொடுத்தவர் தமிழ்நாட்டில் மாணவ மாணவியரின் வாழ்க்கையில் ஒரு சூனியமாக செயல்பட்டவர் எடப்பாடி பழனிச்சாமி.

மாணவ மாணவியர் வாழ்க்கையின் எதிர்காலத்தையே இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கும் பி.ஜே.பி. ஆட்சியை எதிர்த்து தமிழக அரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் எத்தனை சோதனைகள் வந்தாலும் அது எதிர்கொண்டு செயல்படுவதில் பின்வாங்காது என்பது தமிழக எட்டு கோடி மக்களின் நம்பிக்கையை பெற்ற தி.மு.க.வின் முழு முயற்சியை பயன்படுத்தும் உறுதியாக நிற்கும்.

ஆனால் அ.தி.மு.க. என்கிற கட்சி நீட்டைக் கொண்டு வருவதற்கு காரணமான கட்சி இதை ஒட்டுமொத்த மக்களும் தமிழகத்தில் வருகிற 2024 பாராளுமன்ற தேர்தலில் தூக்கி எறிவார்கள். அதுதான் சரியான பதிலாக இருக்கும்.

அரசியலமைப்பு சட்டத்தில் மாநில அரசுக்கும் சட்டமியற்றும் அதிகாரம் உள்ளது. ஆனால் மத்தியில் சர்வாதிகார ஆட்சி இருப்பதனால் அந்த சட்டத்தை செயல்படுத்த போராட வேண்டி உள்ளது.

தமிழக மக்களின் உணர்வுகளை புரியாமல் ஒன்றிய அரசு முழுமையான ஜனநாயக மரபுகளை மீறி ஆணவப் போக்கோடு தொடர்ந்து ஆட்சியில் மட்டும் இருக்க வேண்டும் என்றும் இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு என்பதை மறந்து பிரதமர் தனித்து அவர் மட்டும் பிரதமராக இருக்க வேண்டும் அதிபர் ஆட்சியைப் போல் இந்தியாவில் நடத்த வேண்டும் என்கிற வெறித்தனமான செயல்பாட்டோடு செயல்பட்டு வருகிறார்கள் அதை ஒட்டுமொத்த மக்களும் முறியடித்துக் காட்டுவார்கள்.

இந்தியா முழுவதும் ஒட்டுமொத்த மக்களும் நீட்டுக்கு எதிராக விவசாய குடும்பத்து மாணவர்கள் பட்டியலினமானவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்கள், ஏழை மாணவர்கள், பின்தங்கிய மாணவர்கள், கிராமத்து மாணவர்கள்,

நீட்டை படிக்க முடியாமல் தேர்வு எழுத முடியாமல் வாழ்நாள் முழுவதும் மருத்துவராக வரவேண்டும் என்கிற கனவோடு படித்த அந்த மாணவர்களின் வாழ்வில் மண்ணை வாரி போட்ட எடப்பாடி பழனிச்சாமியின் நீட்டின் ஆதரவு நிலைபாட்டால் இந்தியா முழுவதும் பாதித்த லட்சக்கணக்கான மாணவர்களின் சாபத்துக்கு ஆளான எடப்பாடி பழனிச்சாமியை வாழ்நாள் முழுதுமாக மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

நீட்டில்லாத நிலையை 2024இல் நிச்சயம் பெறுவோம்.